**தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 10- இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, இந்நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியதாக இருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|
| கடந்த ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மீளாய்வாண்டின் தொடக்க மீதிகளுடன் இணக்கப்பட்டபோது வேறுபாடுகள் காணப்பட்டன. | 1.6.1 (ஆ) |

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் வேறு செலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,429,201 க்கான செலவினத்தினை காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறு செலவின தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் கீழ் காட்டப்படாததுடன் தனிநபர் சம்பள மற்றும் செயற்பாட்டு நடவடிக்கை செலவினங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வேறுபட்ட செலவின தலைப்புக்களுக் காக மேற்கொள்ளப் பட்ட செலவுகள் காசு பாய்ச்சல் கூற்றில் தனியாக காட்டப்படல் வேண்டும். |

#### (ஆ) ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வாங்கப்பட்ட ரூபா 169,483 ஆன எலக்ட்ரோ மெக்கானிக்கல் கருவிகள் ஏசீஏ 6, நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையில் ஆண்டில் வாங்கியதாகப் பதிவு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் தொடக்க மீதியில் சேர்க்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக, நிதியல்லாத சொத்துகளின் மீளாய்வாண்டின தொடக்க மீதி முந்தைய ஆண்டின் இறுதி மீதிக்கு சமமாக இருக்கவில்லை. | இது 2001 செலவு விடயத்தின் கீழ் வாங்கப்பட்டது மற்றும் அந்த செலவு விடயத்தின் கீழ் செய்யப்பட்ட கொள்வனவகளை மூலதனமாக்குவதற்கு CIGAS திட்டத்தின் கீழ் எந்த வசதியும் இல்லாததால் தொடக்க மீதியில் சேர்க்கப்பட்டது. இதற்கான அனுமதியை அரச கணக்குகள் திணைக்களம் வழங்கியுள்ளது. | கடந்த ஆண்டின் இறுதி மீதித் தொகை மீளாய்வாண்டின தொடக்க மீதித் தொகையாகக் காட்டப்பட்டு, கொள்வனவுகள் தனித்தனியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். |

**(இ) ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட வாகன விபத்துக்களுக்கான பதிவேடு முறையாக இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படாது இருந்தது. | 2003, 2016 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட நான்கு விபத்துகள் தொடர்பான இழப்பு புத்தகங்களில் பதிவளிக்கப்பட்டு பதிவேடு உடனடியாக புதுப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகன விபத்துக்களுக்கான பதிவேடு உரிய முறையில் இற்றைப்படுத்தப் படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 இலஞ்ச சுற்றிவளைப்புக்கள்- இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2022 திசெம்பர் 31 இல் ரூபா 193,900 ஆன முற்பணம் தொடர்பான வழக்குத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதியான 2023 யூன் 14 ஆந் திகதி வரையில் அம்முற்பணத்தொகை சிறாப்பரிடம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை | ரூபா 23,800 நீதிமன்ற காவலில் உள்ளது. மீதமுள்ள ரூபா 170,100 தொடர்பான வழக்கு கோப்புகளை தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. | வழக்கு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடு முடிந்ததன் பின்னர் முற்பணத்தினை தீர்த்து வைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 1994 இன் 11 ஆம் இலக்க இலஞ்சம் சட்டத்தின் பிரிவு 30 (அ) (3) பிரிவின்படி, சுற்றிவளைப்புக்களில் பயன்படுத்தப்பட்ட பண நோட்டுகளுக்கு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பணச் சான்றிதழொன்று வழங்கப்படுகின்றமையால் முடிந்தளவு அனைத்திற்கும் பணச் சான்றிதழொன்று | 23.06.21 அன்று நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முடியுமாக இருந்தபோதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததால், 2022 திசெம்பர் 31 இல் ரூபா 39,716,535 ஆன அரசின் பணம் வழக்குகள் அதிகாரியின் காவலில் காணப்பட்டது.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 செலவின விடயங்களில் ரூபா 740,814 ஒதுக்கீட்டு மிகுதிக்கு அப்பால் ரூபா 222,033 ஆன பொறுப்புக்கள் எட்டப்பட்டிருந்தன. | ஏனைய செலவின விடயங்களில் சேமிப்புக்கள் இருப்பதால், நி.பி 66 இன் கீழ் ஒதுக்கங்களை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் இந்தக் கடப்பாடுகள் எட்டப்பபடிருந்தன. | ஒதுக்கங்களை விஞ்சாதவாறு பொறுப்புக்கள் எட்டப்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் எட்டப்பட்ட கடப்பாடுகள் கூற்று, இணைப்பு – (iv) இல் வருடாந்த மீண்டெழும் சேவைகள், விநியோகங்கள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட பொறுப்புகள் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் , அதன் கீழ் எடுக்கப்படாத பயணச் செலவுகள், மேலதிக நேரச் செலவுகள் மற்றும் எரிபொருளுடன் தொடர்புடைய ரூபா 564,851 ஆன பொறுப்புக்கள் அக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நி.பி 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் எட்டப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மட்டும் இணைப்பு – (iv) இல் காட்டப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கா சந்தர்ப்பங்கள் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்கம் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16.2 பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் இந்த அறிக்கை உரிய நேரத்தில் ஜனாதிபதி செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் பட்சத்தில் அடுத்த வருடங்களில் பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட முடியும். | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1.6 பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டிலும் மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னதாக பொது 47 அறிக்கையின் படி அழிக்கப்பட வேண்டிய புதுப்பிக்கப்பட வேண்டிய, விற்கப்பட வேண்டிய மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிக்கக் கூடிய பொருட்கள் தொடர்பாக தகுந்த முறையில் நடவடிக்கை மேற்கொண்டு மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சென்ற ஆண்டிற்கான பொருட் கணிப்பு அறிக்கையினை | சிறிது காலதாமதம் ஏற்பட்டுள்ளதால், எதிர்வரும் ஆண்டுகளில் உரிய நேரத்தில் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும், அவ்வாறு செய்யாது பொருட் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் இருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயல நடவடிக்கைத் திட்டம் காலாண்டு முறையில் தயாரிக்கப்பட்டது மற்றும் 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத திட்டம் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்படடுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 2.2 ஆம் பந்தி | நிறுவனத்துடன் தொடர்புடைய நிதி அறிக்கையிடல் படிவங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், வருமான கணக்கீட்டு அதிகாரியால் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டிய ஏசீஏ 1, ஏசீஏ 1 (ii), ஏசீஏ 1 (iii) படிவங்களில், ஆணைக்குழுவினால் ஏனைய செலவுத் தலைப்புக்கள் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானம் காட்டப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது அந்தப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருமான கணக்கீட்டு அதிகாரியால் மட்டும் தயாரிக்கப்பட வேண்டிய படிவம் ஆணைக்குழுவுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடாது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் 2021 ஆம் வருடத்தில் 69 வழக்குகள் முடிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 40 வழக்குகள் அதாவது 58 சதவீதம் வாபஸ் பெறப்பட்டிருந்தன. 18 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததடன் 11 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மட்டுமே தண்டனை பெற்றனர். 2022 ஆம் ஆண்டில், 89 வழக்குகள் ஒதுக்கப்பட்டு அவற்றில் 45 வழக்குகள் பல்வேறு காரணங்களால் வாபஸ் பெறப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 19 வரை அவற்றில் 20 வழக்குகள் மட்டுமே மீண்டும் ஒதுக்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டில் வாபஸ் பெறப்பட்டிருந்த 20 வழக்குகள் மட்டுமே மீண்டும் ஒதுக்கப்பட்டிருந்தன. 09 இற்கு எதிராக வழக்குத் தொடர வேண்டாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. முரணான சாட்சியங்கள் இருப்பதால் மீதமுள்ள 2 பேர் மீதான வழக்குகள் விசாரணையில் உள்ளன. | வாபஸ் பெறப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாக விரைவில் மீண்டும் வழக்குகள் தொடரப்பட வேண்டியமை அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கையொன்று எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் ஆணைக்குழுவின் சட்டப் பிரிவில் பணிகள் நிலுவையில் உள்ள 1,508 கோப்புகள் காணப்பட்டன் அவற்றில் 489 கோப்புகள் 05 ஆண்டுகளுக்கு மேலாகவும், 33 கோப்புகள் 10 ஆண்டுகளுக்கும் மேலான கோப்புகளாகவும் இருந்தன. 2022 திசெம்பர் 31 இல் பணிகள் நிலுவையில் உள்ள 926 கோப்புகள் காணப்பட்டதுடன் அவற்றின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | முடிக்கப்படாத 926 கோப்புகளில், மிகவும் சிக்கலான மற்றும் பெரிய கோப்புகள் கலந்தாலோசிக்கப்பட வேண்டியவை மற்றும் சட்ட அறிக்கைகளை எளிமையான மற்றும் குறுகிய காலத்தில் வழங்கக்கூடிய கோப்புகள் உள்ளன. இதன் காரணமாக குறிப்பிட்ட நேரத்தில் காலப்பகுப்பாய்வொன்றை செய்ய முடியாதிருந்தது. | கோப்புகளின் வேலைகள் முடிக்கப்பட்டு செயல்திறனை அதிகரிக்க வேண்டியதுடன் கோப்புகளின் காலப் பகுப்பாய்வொன்றை சமர்ப்பிக்க முடியுமாக இருத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான தேசிய செயல் நடவடிக்கைத்திட்டம் 2019 பெப்ரவரி 5 ஆம் திகதி | கோவிட் தொற்றுநோய் காரணமாக தொடர்புடைய பணிகள் தாமதமாகிவிட்டதுடன் | தேசிய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் 2019 மார்ச் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 20 வரை அத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 3½ ஆண்டுகள் கடந்தும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள 27 பணிகளில் 11 பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | மீதமுள்ள பணிகள் 2023 இல் செயற்படுத்தப்படும். | பணிகள் விரைவில் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 3.2 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 639,843 ஆன 08 நட்டம் மற்றும் இழப்பீட்டு மீதிகளில் 2003,2016 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் எற்பட்ட மொத்தம் ரூபா 544,293 ஆன 04 விபத்துக்கள் தொடர்பாக 2023 மே 22 வரையிலும் நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைவாக விசாரணை நடாத்தப்பட்டு குறிப்பிட்ட தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பதிவளிக்கப்படுவதற்கோ ஆன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2003,2016 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் எற்பட்ட 04 விபத்துக்கள் தவிர்ந்த மிகுதி அனைத்தும் புத்தகங்களில் பதிவளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் இந்த நான்கு விபத்துக்கள் தொடர்பான நட்டங்களும் விரைவில் புத்தகங்களில் பதிவளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைய அறவிடுவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கை யொன்றை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு சட்டத்தை திருத்துவதற்கான பணிகள் மீளாய்வாண்டில் கூட நிறைவடையவில்லை. | இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு திருத்தப்பட்ட சட்ட வரைவு நிறைவேற்றப்படுவதற்காக தற்போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தை திருத்துவதற்கான பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2006 ஜனவரி 31 இல் வழக்குப் பொருட்களின் கைத்தவிர்ப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவினால் 10 கோப்புகள் தொடர்பான 36 வழக்குப் பொருட்களை ஏலத்தில் விடுவதற்கும் 27 கோப்புகள் தொடர்பான 32 பொருட்களை கைத்தவிர்ப்புச் செய்வதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது டன் அந்தப் பரிந்துரைகள் வழங்கப்பட்டு 17 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்த பரிந்துரைகள் மீளாய்வாண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தப் படவில்லை. | 2023.06.21 அன்று நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வழக்குப் பொருட்களின் கைத்தவிர்ப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் விரைவில் செயற்படுத்தப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் சிவில் பதவியணி தகவலின் படி 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சிரேஷ்ட மட்டத்தில் 36 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 203 வெற்றிடங்களும், இரண்டாம் மட்ட்தில் 158 வெற்றிடங்களும், மற்றும் ஆரம்ப மட்டத்தில் 56 வெற்றிடங்களும் இருந்தன. விசாரணை பதவியணி தகவலின் படி அப்பணிக்குழுவில் 15 வெற்றிடங்கள் இருந்தன. | 2022 ஆம் ஆண்டு முதல் அரசு ஊழியர் ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதால், ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியவில்லை. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நடாத்தப்பட்ட பணியாளர் நல்லிணக்க துணைக் குழு அறிக்கையின்படி, பல பதவிகள் குறைக்கப் பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட சில பதவிகளுக்கு மட்டுமே ஆட்சேர்பபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயல்திறனைப் பாதிக்கக்கூடிய அத்தியாவசிய பணியிடங்களில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணி திரத்தப்படுவதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |